நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார்

Our God Is in Heaven

Album 28 Song 3

ஆல்பம் 28 பாடல் 3



நம்முடைய தேவன்

DATE 05/05/2007 118 பாடல்

நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார்
தமக்கு பிரியமான யாவையும் செய்கிறார்
புறஜாதிகளின் தேவர்களோ பிசாசுகளன்றோ
அவர் வெள்ளியும் பொக்கிஷமும், மனுஷருடைய கைவேலை

விக்கிரகங்களுக்கு காதிருந்தும் கேளாது
கண்ணிருந்தும் காணாது
விக்கிரகங்களுக்கு மூக்கிருந்தும் மோராது
நீள்கரமிருந்தும் நிலையாது

(நம்முடைய தேவன்)

விக்கிரகங்களுக்கு கைகளிருந்தும் தொடாது
கால்களிருந்தும் நடவாது
விக்கிரகங்களுக்கு தொண்டையிருந்தும் சத்தமிடாது
சேனைகளிருந்தும் உணராது

(நம்முடைய தேவன்)

விக்கிரகங்களை செய்கிறவர்களும்
அவைகளைப் போலவே இருக்கின்றனர்
அவைகளை நம்புகிறவர்கள்
அவைகளைப் போலவே இருக்கின்றனர்

(நம்முடைய தேவன்)